# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

**********

முறையீட்டு மனு எண்.95/2019/பே.1
ஆணை நாள்: **17-02-2020.**

திரு. பி.முனியசாமி,
15/93, நாடார் தெரு,
சேர்மன் இல்லம்,
சாயல்குடி,
கடலாடி வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்–623120. — முறையீட்டு மனுதாரர்.

1.செயல் அலுவலர்
சாயல்குடி பேரூராட்சி,
இராமநாதபுரம் மாவட்டம்.
2.திரு.பாபு,
இளநிலை உதவியாளர்,
சாயல்குடி பேரூராட்சி — எதிர் மனுதாரர்கள்.

## ஆணை.

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டம், எண்.15/93, நாடார் தெரு, சேர்மன் இல்லம், சாயல்குடி பகுதியினைச் சேர்ந்த திரு.பி.முனியசாமி என்பவரது 11.06.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.06.2019 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.95/2019 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு உரியவாறு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி பேரூராட்சி செயல் அலுவலர், இளநிலை உதவியாளர் திரு.பாபு ஆகியோர் மீது பல்வேறு புகார்களை தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுவிற்கான 04.07.2019 நாளிட்ட இராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்ட குடிநீர் பைப்லைன் பழுது, கருவேல மரம் அகற்றுதல், மற்றும் கால்வாய் பணிகள் பழுது பார்த்தல் போன்ற பணிகளை தனி நபர்களை வைத்து கொட்டேஷன் பெறப்பட்டு அதன் அடிப்படையில், குறைந்த கொட்டேஷன் அளித்த நபருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்படுவதாகவும், மின் உதிரி பாகங்கள், குடிநீர் உதிரி பாகங்கள் மற்றும் பொது சுகாதாரப் பொருட்கள் அனைத்தும் ஆண்டு குத்தகை விடப்பட்டு, மூன்று மாதங்களுக்கு

தேவையான பொருட்கள் கொள்முதல் செய்து, பொதுமக்களின் புகாருக்கு இடமளிக்காவண்ணம் பணிகள் நடைபெற்று வருவதாகவும், முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளவாறு செலவின சீட்டுகள் அனைத்தும் குறிப்பிட்ட சில நபர்களின் பெயரில் போடப்படுவதில்லை எனவும், குறைந்த விலைப்புள்ளி அளித்த நபர் எவரோ அவர் பெயரில்தான் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி முடிவுற்றவுடன் சம்பந்தப்பட்ட நபருக்கு பணிக்கான தொகை கோடிட்ட காசோலை மூலம் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. முறையீட்டு மனுதாரர் ஜனவரி, 2019 முதல் மார்ச் 2019 வரையிலான காலத்திற்குள் செலவின சீட்டுகளை நகல் எடுத்துத் தரக் கோரி தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு கொடுத்ததாகவும், பேரூராட்சியின் செலவின சீட்டுகள் பிரதி மாதம் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறைக்கு அனுப்பி வைக்கப்படுவதால் அச்செலவின சீட்டுகளின் பிரதிகள் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களுக்கும் பிரதி மாதம் தனி அலுவலரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாகவும், இதில் முறைகேடு ஏதும் நிகழவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் சட்டத்தில் கோரிய தகவல்கள் அனைத்தும், அவர் பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு மேல் முறையீடு செய்ததின் அடிப்படையில் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு வழங்கப்பட்டதாகவும், முறையீட்டு மனுதாரர் சாயல்குடி பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் எனவும், சில திட்டப் பணிகள் அவரது விருப்பத்திற்கேற்ப ஒதுக்கீடு செய்யப்படாததால் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக இவ்வாறு புகார் மனு அனுப்பியுள்ளார் எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

13.02.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.பி.முனியசாமி தனது வாக்குமூலத்தில் தனது 11.06.2019 நாளிட்ட புகார் மனுவில் தெரிவித்த புகார்களையே தெரிவித்ததுடன், இப்புகார்கள் தொடர்பாக ஆவணங்கள் கோரி சாயல்குடி பேரூராட்சி செயல் அலுவலருக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு செய்துள்ளதாகவும், ஆனால் கோரிய விவரங்கள் தனக்கு அளிக்கப்படவில்லை எனவும், சாயல்குடி பேரூராட்சி செயல் அலுவலர் கோரிய விவரங்களை வழங்கினால் தனது புகாருக்கான உரிய ஆதாரங்களை பின்னர் சமர்ப்பிப்பதாகவும் தான் சாயல்குடி பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரராக பேரூராட்சிப் பணிகள் செய்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

13.02.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான சாயல்குடி பேரூராட்சி செயல் அலுவலர் திரு.மா.சேகர் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.பாபு ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் புகார் மனு தொடர்பாக 04.07.2019 நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள விவரங்களையே தங்களது வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளுமாறும், முறையீட்டு மனுதாரர் சாயல்குடி பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் எனவும், அவரது விருப்பத்திற்கேற்ப சில பணிகள் ஒதுக்கீடு செய்யாததால் காழ்ப்புணர்ச்சி காரணமாக புகார் மனு அனுப்பியுள்ளதாகவும், முறையீட்டு மனுதாரர் தனது ஒப்பந்தத்தில் அளித்துள்ள நிதி அளவிற்கு மீறிய பணிகளை எடுத்து இதர நபர்களுக்கு கொடுத்து பயனடைவார் எனவும், தற்போது அவ்வாறான நிகழ்வுகள் நடைபெறவில்லை என்பதால் இவ்வாறான புகார் மனுவினை எழுதியுள்ளார் எனவும், முறையீட்டு மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிய விவரங்கள் யாவும் அவருக்கு விதிகளுக்குட்பட்டு அனுப்பப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான சாயல்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர்களின் வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டன. முறையீட்டு மனுதாரர் தனது புகாருக்கான ஆதாரங்களை தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரியுள்ளதாகவும், அவைகள் கிடைத்த பின்னர் ஆதாரங்கள் சமர்ப்பிப்பதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இந்நிலையானது புகார்களை எழுதிவிட்டு பின்னர் ஆதாரங்களை சேகரிப்பது போல உள்ளது. இந்நிலை ஏற்பதற்கில்லை மேலும் சாயல்குடி பேரூராட்சி செயல் அலுவலர் முறையீட்டு மனுதாரர் தகவல் பெறும்

உரிமை சட்டத்தின் மூலம் கோரிய விவரங்களை விதிமுறைகளுக்குட்பட்டு அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். எனவே சாயல்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையினை ஏற்று முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. இருப்பினும் மனுதாரர் பணி முறைகேடு குறித்து குறிப்பானை பணி விவரங்கள் மற்றும்ஆதாரங்களுடன் உரியவாறு முறையீட்டு மனு தாக்கல் செய்யும் பட்சத்தில் 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் (முறையீடுகள் தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் தீர்வு செய்யப்படுதல் முறைகள்) விதிகளில் பிதி–4ன்படி புதிய முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டு உரிய விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் விதி. 8(2)ன்படி ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

18.2.2020

பெறுநர்
1.திரு. பி.முனியசாமி,
15/93, நாடார் தெரு,
சேர்மன் இல்லம்,
சாயல்குடி,
கடலாடி வட்டம்,
இராமநாதபுரம் மாவட்டம்–623120
2.செயல் அலுவலர்,
சாயல்குடி பேரூராட்சி,
இராமநாதபுரம் மாவட்டம்.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
என்.ஜி.ஒ, பி.காலனி,
ஜவஹர் நகர்,
பெருமாள்புரம் அஞ்சல்,
திருநெல்வெலி–627007
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்)